FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8323791

1. District : மாவட்டம் Coimbatore | PS: காவல்நிலையம் VBAC | Year: ஆண்டு 2026 | FIR No.: மு.த.அ. எண் 23/2026/ACICB | Date: நாள் 05.11.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018. | Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Wednesday | Date from : நாள் முதல் 04.11.2026 | Date to : நாள் வரை 04.11.2026

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 15.30 hrs | Time to : நேரம் வரை 17.45 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.11.2026 | Time : நேரம் 12.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் CD Vol. II | Time : நேரம் 12.30 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 10 km, South.

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி o/o. The Food Safety Officer, Code 560. Coimbatore Corporation Central Zone Ward No.66 Sanitary Inspector's Office Building, Puliyakulam, Coimbatore District

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. N. Vijayakumar | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Narayanasamy

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Deputy Inspection Cell Officer | (g) Address : முகவரி o/o. District Inspection Cell Officer, Collectorate, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. K. Ramasamy, Food Safety Officer, Code 560. Ward Nos. 53, 55, 56, 65, 67, 68, 69 & 70 of Coimbatore Corporation Central Zone, Ward No. 66 Sanitary Inspector's Office building, Puliakulam, Coimbatore

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted: Before the Hon'ble Special Judge, Special Court for Cases under Prevention of Corruption Act, Coimbatore.

Separate Sheets enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 05.11.2026 @ 14.30hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. Ezhilarasi.
Rank: நிலை Inspector of Police. No. எண்
Vigilance and Anti-Corruption
Coimbatore.
05.11.2026

கனம் சிறப்பு நீதிபதி, உழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:-

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 23/2026/AC/CB u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண். C 8323791 யின் தொடர்ச்சி...

இன்று 05.11.2026-ம் தேதி 12.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.N.விஜயகுமார் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 23/2026/AC/CB u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ஆக 13.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அந்த புகாரின் விவரம் பின்வருமாறு; அனுப்புநர், N.விஜயகுமார், துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண்.240/2026/ஐ1, நாள்: 05.11.2026. அம்மா, பொருள்: திடீர் சோதனை - கோயம்புத்தூர் மாவட்டம் - உணவு பாதுகாப்பு துறை - உணவு பாதுகாப்பு அலுவலர் K.ராமசாமி, Code 560, மாநாகராட்சி மத்திய மண்டல வார்டு-66 சுகாதார ஆய்வாளர் அலுவலகம், புலியகுளம் - திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக. கோயம்புத்தூர் மாவட்டம், அவினாசி ரோடு லட்சுமி மில்ஸ் - இராமநாதபுரம் செல்லும் ரோடில், புலியகுளத்தில் அமைந்துள்ள கோயம்புத்தூர் மாநாகராட்சி மத்திய மண்டலத்தின் வார்டு-66-ன் சுகாதார ஆய்வாளரது அலுவலக கட்டிடத்தில் இயங்கி வரும், உணவு பாதுகாப்பு அலுவலகத்தில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.ராமசாமி Code 560 என்பவர் அவரது அதிகார வரம்பிற்குட்பட்ட வார்டுகளான 53, 55, 56, 65, 67, 68, 69 மற்றும் 70 ஆகிய வார்டுகளில் இயங்கிவரும் அனைத்து உணவு

நிறுவனங்கள், மளிகை கடைகள், டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ், பழக்கடைகள், இறைச்சி கடைகள், பேக்கரி மற்றும் கல்வி நிறுவனங்களில் இயங்கிவரும் கேண்டின்கள் ஆகிவற்றில் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச்சட்டத்தின் விதிமுறைகளுக்கு எதிரான குறைபாடுகளின் அடிப்படையில் ஏற்கனவே வழங்கப்பட்ட நோட்டீசுகளுடன் சென்று நடவடிக்கை எடுக்கப்போவதாக கூறி வரவிருக்கும் தீபாவளி பண்டிகைக்கான மாமூல் தொகையினை சம்மந்தப்பட்ட இடங்களுக்கு நேரடியாகவும், சம்மந்தப்பட்ட உணவு நிறுவனங்களின் மூலம் பொதுஇடத்திலும் வைத்து மேற்படி திரு.ராமசாமி அவர்களே நேரடியாக வசூல் செய்துவருவதாகவும், சில நபர்களிடமிருந்து அவருக்கு உதவியாக உள்ள தனிநபரான திரு.விக்னேஷ் என்பவரின் மூலமும் ரொக்கமாகவும் GPay மூலமும் வசூலித்துவருவதாக கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலரான திரு.இராமசாமி என்பவரை 04.11.2026-ம் தேதி மாலை சுமார் 3.30 மணியிலிருந்து கண்காணிக்கப்பட்டதில், மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி என்பவர் மாலை சுமார் 4.35 மணியளவில் TN 37 ED 4392 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற MARUTHI SWIFT காரில் வந்து அக்காரினை மேற்படி கோயம்புத்தூர் மாநாகராட்சி மத்திய மண்டலத்தின் வார்டு-66-ன் சுகாதார ஆய்வாளரது அலுவலக கட்டிடத்தில் இயங்கி வரும், அவரது அலுவலகத்தின் முன்புறம் ரோட்டில் ஓரமாக நிறுத்திவிட்டு அதிலிருந்து இறங்கி அக்காரின் பின்புறமுள்ள பொருள்வைக்கும் டிக்கியினை திறந்து அதனுள் எதையோ வைத்துவிட்டு, ரிமோட்கண்ட்ரோல் சாவியின் மூலம் காரினை லாக் செய்த பின்னர் அவரது அலுவலகத்திற்குள் சென்று விட்டார். பின்னர் சிறிது நேரம் கழித்து மீண்டும் மேற்படி காருக்கு வந்து அதன் டிக்கியினை மறுபடியும் திறந்து அதனுள் எதையோ வைத்து விட்டு அவரது கையில் சில தாள்களுடன் காரில் ஏற முற்பட்டவரை அன்றையதினம் மாலை சுமார் 5.45 மணியளவில் எனது தலைமையில் அங்கு சென்றிருந்த கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் காவல் குழுவினரால் தடுத்து நிறுத்தப்பட்டு உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி என்பவரிடம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் தன்னையும் தன்னுடன்

வந்திருந்த கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டு திடீர் தணிக்கை மேற்கொள்ள வந்திருக்கும் விபரத்தை தெரிவித்தபோது, மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி அவர்கள் மிகுந்த பதட்டமடைந்தார். உடனே திடீர் தணிக்கை குழுவினராகிய நாங்கள் அவரை ஆசுவாசப்படுத்தினோம். அதனைத்தொடர்ந்து சோதனைக்குழுவினராகிய நாங்கள் அனைவரும் எங்களை சுய பரிசோதனை செய்து காண்பித்தவுடன், மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி அவ்ர்கள் ஓட்டி வந்து அவரது அலுவலகத்தின் முன்பு மெயின்ரோடில் நிறுத்தப்பட்டிருந்த TN 37 ED 4392 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற காரை, போக்குவரத்து நெரிசல் மிகுந்த மேற்படி பிரதான சாலையில் வைத்து சோதனை செய்ய முடியாதென்பதால், எனது அறிவுரைப்படி அவ்வலுவலக காம்பவுண்டுக்குள் கொண்டு வந்து நிறுத்தப்பட்டு, சோதனைக்குழுவினரால் மேற்படி காரின் பின்புறமிருந்த டிக்கியினை திறந்து அதை சோதனை செய்ததில் இனிப்புகளும், சில உணவுபொருட்களும் காணப்பட்டது. அதுகுறித்து மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி அவர்களிடம் கேட்க அவைகள் அனைத்தும் தன்னால் 04.11.2026-ம் தேதியன்று எடுக்கப்பட்ட Food Samples என்று தெரிவித்தார். பின்னர் மேற்படி காரின் Stepney டயரினை மூடியிருந்த கருப்புநிற Floor Mat-ஐ எடுத்துப்பார்த்தபோது அதிலிருந்த Stepney டயருக்குள் சில காக்கி நிற கவர்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அவற்றை எடுத்து பார்க்கையில் மொத்தம் 5 எண்ணிக்கையிலான காக்கி கவர்களும், ஒரு வெள்ளை நிற கவரும் அவைகளுக்கிடையில் மடித்துவைக்கப்பட்ட நிலையில் ரப்பர் பேண்ட் போடப்பட்டநிலையில் ஒரு பணக்கற்றையும் காணப்பட்டது. மேலும் மேற்படி காரினை சோதனையிட்டதில் அதன் பின் இருக்கையில் அதில் மஞ்சள் நிற Shoulder Bag ஒன்று இருந்தது. அது குறித்து உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி அவர்களிடம் கேட்க அது அவரது Shoulder Bag என்று தெரிவித்தார். மேலும் மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி அவர்களின் அலுவலத்தையும் சோதனையிட வேண்டுமென தெரிவித்தபோது, அவர் மேற்கு பார்த்து அமைந்திருந்த

அவ்வலவலகத்தின் போர்டிகோவை கடந்து, கண்ணாடி தடுப்புக் கதவுகளை திறந்து தெற்கு பார்த்திருந்த சுகாராரா ஆய்வாளரது அறைக்கு அருகில் மேற்கு பார்த்து இருந்த கண்ணாடிக் கதவுகளை திறந்து K.RAMASAMY, FOOD SAFETY OFFICER WARD NO. 53, 55, 56, 65, 67, 68, 69,70 என்ற அச்சிடப்பட்ட தாள் ஒட்டப்பட்டிருந்த அறைக்குள் அழைத்துச்சென்றார். அதனைத்தொடர்ந்து அவ்வலுவலகத்திலிருந்த உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி அவர்களது டேபிளின் மீது மேற்படி TN 37 ED 4392 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற காரின் டிக்கியிலிருந்து எடுக்கப்பட்ட 5 எண்ணிக்கையிலான காக்கி நிற கவர்கள், ஒரு வெள்ளைநிற கவர் மற்றும் ஒரு பணக்கற்றையினை பார்வையிடப்பட்டது. அவற்றில் முதல் காக்கிநிற கவரினை பார்வையிட்டதில் அதனுள் 28 எண்ணிக்கையுடைய 500 ரூபாய் நோட்டுகள் (500 X 28 = 14,000) மொத்தம் ரூ.14,000/- இருந்தது. பின்னர் இரண்டாவது காக்கிநிற கவரினை பார்வையிட்டதில் அதனுள் 10 எண்ணிக்கையுடைய 500 ரூபாய் நோட்டுகள் (500 X 10 = 5,000) மொத்தம் ரூ.5,000/- இருந்தது. அதனைத்தொடாந்து, பின்னடிக்கப்பட்டிருந்த மூன்றாவது காக்கிநிற கவரினை திறந்து பார்வையிட்டதில் அதனுள் 10 எண்ணிக்கையுடைய 500 ரூபாய் நோட்டுகள் (500 X 10 = 5,000) மொத்தம் ரூ.5,000/- இருந்தது. பின்னர், பின்னடிக்கப்பட்டிருந்த நான்காவது காக்கிநிற கவரினை திறந்து பார்வையிட்டதில் அதனுள் 20 எண்ணிக்கையுடைய 500 ரூபாய் நோட்டுகள் (500 X 20 = 10,000) மொத்தம் ரூ.10,000/- இருந்தது. அதனைத்தொடர்ந்து ஐந்தாவது காக்கிநிற கவரினை திறந்து பார்வையிட்டதில் அதனுள் 20 எண்ணிக்கையுடைய 500 ரூபாய் நோட்டுகள் (500 X 20 = 10,000) மொத்தம் ரூ.10,000/- இருந்தது. தொடர்ந்து மேற்படி வெள்ளை நிற கவரை பார்வையிட்டதில் அதனுள் 10 எண்ணிக்கையுடைய 500 ரூபாய் நோட்டுகள் (500 X 10 = 5,000) மொத்தம் ரூ.5,000/- இருந்தது. இறுதியாக, மேற்படி மடித்து வைக்கப்பட்டு ரப்பர் பேண்ட் போடப்பட்டிருந்த 500 ரூபாய் நோட்டுக்கத்தையினை எண்ணிப்பார்க்க அதில் 16 எண்ணிக்கையுடைய 500 ரூபாய் நோட்டுகள் (500 X 16 = 8,000) மொத்தம் ரூ.8,000/- இருந்தது. மேற்கண்ட வகையில் மேற்படி 6 கவர்களிலும், தனியாக மடித்து

வைக்கப்பட்டிருந்த நிலையிலிலும் இருந்த மொத்தத்தொகையான ரூ.57,000/- ஆனது TN 37 ED 4392 என்ற பதிவெண் கொண்ட காரின் டிக்கியில் இருந்தது குறித்து நான் மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி அவர்களை விசாரிக்க, அந்த கவர்கள் காருக்குள் எப்படி வந்தது என்று தனக்கு தெரியாதென்று முதலில் சொல்லிவிட்டு சிறிது நேரம் கழித்து, அவற்றை தனது மனைவி வைத்திருக்கலாம் என்று முன்னுக்கு பின் முரணாக மாறி மாறி பதிலளித்தார். மேற்படி பதில் ஏற்புடையதாக இல்லை என்பதால் மேற்படி கவர்கள் மற்றும் பணக்கத்தையானது உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி Code 560 என்பவர் அவரது அதிகார வரம்பிற்குட்பட்ட வார்டுகளான 53, 55, 56, 65, 67, 68, 69 மற்றும் 70 ஆகிய வார்டுகளில் 04.11.2026-ம் தேதியன்று தீபாவளி மாமூலாக வசூலிக்கப்பட்ட லஞ்சப்பணமாக இருக்கலாம் எனக்கருதி மேற்படி தொகை ரூ.57,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், உணவு பாதுகாப்பு அலுவர் திரு.ராமசாமியிடம் வேறு பணம் ஏதாவது பணம் உள்ளதா என்று கேட்ட அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.920/- எடுத்து ஆஜர் செய்து அது அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால் அப்பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலரது காரின் பின் இருக்கையில் வைக்கப்பட்டிருந்த மஞ்சள் நிற Shoulder Bag-ஐ பார்வையிட்டதில் அதன் முன் ஜிப்பில் ரூபாய் நோட்டுகள் ரூ.240/- மற்றும் சில்லரைக்காசுகள் ரூ.13/- இருந்தது. அது குறித்து உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமியிடம் கேட்க அப்பணம் அவ்வப்போது அவரால் வைக்கப்பட்ட சில்லரை தொகை எனத்தெரிவித்ததால் அத்தொகையானது அவரிடமே கொடுக்கப்பட்டது. தொடர்ந்து மேற்படி Shoulder Bag-ன் 2-வது ஜிப்பினை பார்வையிட்டதில் அதில் எதுவுமில்லை. 3-வது ஜிப்பினை பார்வையிட்டதில் அதில் 6 எண்ணிக்கையிலான அஞ்சலக காப்பீட்டு/சேமிப்பு புத்தகங்கள் காணப்பட்டது. அந்த 6 எண்ணிக்கையிலான அஞ்சலக காப்பீட்டு/சேமிப்பு புத்தகங்கள் பார்வையிடப்பட்டு அதிலிருந்த விபரங்கள் குறித்துக்கொள்ளப்பட்டவுடன் உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து

மேற்படி Shoulder Bag-ன் 4-வது ஜிப்பினை திறந்து பார்க்கையில் அதில் 32 எண்ணிக்கையிலான மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி அவர்களது அலுவலக முகவரியிட்ட முறையே "உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச்சட்டம் 2006, பிரிவு 26, 27, 31, 48(2) (a)(i) (ii), உடன் 55 கீழ் பிறப்பிக்கபட்ட நோட்டீசுகள், கோவை மாவட்ட நியமன அலுவலரால் வழங்கப்பட்ட 13 எண்ணிக்கையிலான ஆணைகள் மற்றும் 3 எண்ணிக்கையிலான FSSAI சான்றிதழ்களும் காணப்பட்டன. மேலும் மேற்படி திடீர் சோதனையின் போது அன்றையதினம் மாலை சுமார் 6.30 மணியளவில் இருவர் அவ்வலுவலகம் ஆஜராகி உணவு பாதுகாப்பு அலுவலரை சந்திக்க வந்திருப்பதாக தெரிவித்தனர். அவர்களை விசாரித்தபோது அவர்களில் ஒருவர் தனது பெயர் S.M.செந்தில்குமார் என்றும் மற்றொருவர் திரு.ராம்பிரகாஷ்.ஜோ என்றும் தாங்கள் SSA Group என்ற பெயரில் சேலம் R.R.பிரியானி என்ற பெயரில் ஒரு உணவகத்தை கோவை இராமநாதபுரம் பகுதியில் 22.10.2026-ம் தேதி முதல் நடத்தி வருவதாகவும், அதற்கான உரிய சான்றினை உணவு பாதுகாப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து பெறுவதற்காக உணவு பாதுகாப்புத்துறை அலுவலரான திரு.ராமசாமி என்பவரை கைபேசி மூலம் தொடர்புகொண்டதாகவும், அவரது அறிவுரையின் பேரில் கடந்த 08.10.2026-ம் தேதி மாலை சுமார் 3.30 மணிக்கு திரு.விக்னேஷ் என்ற நபரை தொடர்பு கொண்டு அவரது G-Pay-க்கு ரூ.5500/-ஐ அனுப்பி வைத்ததாகவும், அதன் பின்பு கடந்த 31.10.2026-ம் தேதி உணவு பாதுகாப்பு சான்றிதழை திரு.ராமசாமி அவர்கள் தன்னுடைய செல்போன் எண்.9944930010-க்கு Whats App மூலம் தனக்கு அனுப்பிவைத்து, உண்மை நகலை அவரது அலுவலகத்திற்கு நேரில் வந்து பெற்றுக்கொள்ளும்படி சொன்னதின் பேரில் அன்றைய தினம் அவ்வலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தனர். மேலும், மேற்படி 32 + 13 எண்ணிக்கையிலான முறையே நோட்டீசுகள் / ஆணைகள் மற்றும் 3 எண்ணிக்கையிலான FSSAI சான்றிதழ்கள் ஆகியவை நகலெடுக்கப்பட்டது. மேற்படி நகல்களில், தகவலின் பேரில் அன்றைய தினம் மாலை சுமார் 6.45 மணிக்கு அவ்வலுவலகதம் வந்திருந்த கோவை மாவட்ட உணவு பாதுகாப்புத்துறையின் நியமன அலுவலர் டாக்டர்.அனுராதா

அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு அவைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அசல் ஆவணங்கள் அனைத்தும் டாக்டர்.அனுராதா அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி அவர்களின் அலுவலக அறையை பார்வையிட்டதில் அதில் நிறைய பார்சல்கள் காணப்பட்டது. அவை குறித்து மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலர் அலுவலரை விசாரித்தபோது அவைகள் அனைத்தும் தன்னால் அலுவல் நிமித்தம் Collect செய்யப்பட்ட Samples என்று தெரிவித்தார். மேலும் மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலர் அவரது காரின் டிக்கியில் வைத்திருந்த பணத்துடன் கூடிய மேற்படி 6 கவர்கள் மற்றும் அவற்றுடன் மடித்து வைத்திருந்த பணத்திற்கான தன்னிலை விளக்கத்தினை அவர் எழுத்து மூலமாக என்னிடம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி திடீர் சோதனை நடவடிக்கைகள் 04.11.2026-ம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 10.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளையும், அதன் விபரங்களையும் இத்துடன் இணைத்துள்ளேன். அதில் மேற்படி திடீர் சோதனை சம்மந்தமாக அனைத்து விபரங்களையும் குறிப்பிட்டுள்ளேன். மேலும் திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் ரூ.57,000/-, லஞ்சப்பணம் வைக்கப்பட்டிருந்த 5 காக்கி நிற கவர்கள் மற்றும் ஒரு வெள்ளை நிறக்கவர், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலர் திரு.ராமசாமி அவர்களது தன்னிலை விளக்க கடிதம் ஆகியவற்றையும் இத்துடன் இணைத்துள்ளேன். எனவே மேற்படி திடீர் தணிக்கையின்போது கண்டறியப்பட்ட மேற்சொன்ன முறைகேடு சம்மந்தமாக, கோவை மாவட்ட உணவு பாதுகாப்பு துறையின், கோவை மாநகராட்சியின் மத்திய மண்டலத்தில் உள்ள 53, 55, 56, 65, 67, 68, 69 மற்றும் 70 ஆகிய வார்டுகளின் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.ராமசாமி Code 560 என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxx) N.விஜயகுமார், துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். இணைப்பு:- (1).திடீர் சோதனை நடவடிக்கைகள், (2).கைப்பற்றப்பட்ட பணம் ரூ.57,000/-, (3).காக்கி நிற கவர்கள்-5, வெள்ளை

நிறக்கவர்-1, (4).கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் (5).உணவு பாதுகாப்பு அலுவலர் Code 560 திரு.K.ராமசாமி என்பவரது தன்னிலை விளக்க கடிதம். Respected Sir, Received the complaint on 05.11.2026 at about 12.30 hrs and registered the case in Coimbatore V&AC Cr.No.23/2026/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018, on 05.11.2026 at about 13.00 hrs. (Sd. xxxxxx) R.எழிலரசி, 05/11/2026 Inspr. V&AC, CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர் Code 560 திரு.K.ராமசாமி என்பவரது தன்னிலை விளக்க கடிதம் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, உழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

(R.எழிலரசி) 05/11/2026

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.